புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன்

• திருவள்ளுவர் ஆண்டு 2055 • ஆகஸ்ட் 15, 2024 • புரட்சி 24 • முழக்கம் 31 • விலை ரூ.3.00



## கழகத் தலைமையகத்தில் குடிஅரசு நூற்றாண்டு ஆய்வு நூலகம்
## சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் திறந்துவைத்தார்!

**சென்னை :** திராவிடர் விடுதலைக் கழகத்தின் 13ஆவது ஆண்டு தொடக்க நாளை முன்னிட்டு 12.08.2024 அன்று மயிலாப்பூரில் உள்ள கழகத் தலைமை அலுவலகத்தில் "குடிஅரசு நூற்றாண்டு ஆய்வு நூலகம்" திறக்கப்பட்டது.

நிகழ்வில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட ஆயிரம்விளக்கு சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன், நூலகத்தை ரிப்பன் வெட்டித் திறந்து வைத்து சிறப்புரையாற்றினார்.

மேலும் கருஞ்சட்டைப் பதிப்பக இயக்குனர் பெல் இராசன் சிறப்புரையாற்றினார். அவர் குடிஅரசு நூற்றாண்டு ஆய்வு நூலகத்திற்காக சுமார் 15,000/- மதிப்புள்ள 96 நூல்களை வழங்கியதுடன் கணினி வாங்குவதற்காக நன்கொடையாக ரூ.25,000/-யை கழகப் பொதுச்செயலாளரிடம் வழங்கினார்.

நிறைவாகக் கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன், விழாப் பேருரை யாற்றினார்.

கூட்டத்தை ஒருங்கிணைந்தச் சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் இரா.உமாபதி ஒருங்கிணைத்தார்.


இதில் கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசி குமரன், கழகத் தலைமைக்குழு உறுப்பினர் அன்பு தனசேகர் மற்றும் கழக மாவட்ட - பகுதிக் கழகப் பொறுப்பாளர்கள், தோழமை இயக்கத்தினர், பதிப்பாளர்கள், வாசகர்கள், கழகத் தோழர்கள் 60க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

நிகழ்வில் குடிஅரசு நூற்றாண்டு ஆய்வு நூலகம் உருவாவதற்காக உழைத்த கழகத் தோழர்களுக்கு பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது.

நன்செய் பதிப்பகம் கவிஞர் தம்பி மற்றும் கருப்பு பிரதிகள் கருப்பு நீலகண்டன் ஆகியோர் தலா 5000/- மதிப்புள்ள நூல்களை வழங்கினர். மேலும் திமுக ஓ.சுந்தரம் கழகத் தோழர்கள் லீலாவதி, தினகரன், உள்ளிட்டோரும் ஆய்வு நூலகத்திற்கு நூல்களை வழங்கினார்கள்.







### 'குடிஅரசு' நூற்றாண்டு ஆய்வு நூலகம் திறப்பு!

தமிழ்ச் சமூகத்தின் போக்கைப் புரட்டிப் போட்ட இதழ்களில் ஒன்று குடிஅரசு நூற்றாண்டு 'குடிஅரசு'. பெரியாரின் ஆய்வு நூலகம் பேராயுதமான இந்த இதழின் நூற்றாண்டு கொண்டாடப்பட்டு வரும் வேளையில், திராவிடர் விடுதலைக் கழகம் 'குடி அரசு நூற்றாண்டு ஆய்வு நூலகம்' ஒன்றை சென்னையில் அமைத்துள்ளது. மயிலாப்பூர், 95, நடேசன் சாலையில், அம்பேத்கர் பாலம் அருகில், திராவிடர் விடுதலைக் கழகத்தின் தலைமை அலுவலகத்தில், இந்த ஆய்வு நூலகம் அமைக்கப்பட்டுள்ளது. ஆயிரம்விளக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மருத்துவர் எழிலன் சமீபத்தில் இந்த நூலகத்தைப் பொதுமக்கள் பயன்பாட்டுக்காகத் திறந்து வைத்தார்.

'திராவிடம்', 'பெரியாரியம்', 'அம்பேத்கரியம்', 'மார்க்சியம்', 'சூழலியல்', 'வரலாறு', 'சட்டம்' எனப் பல்வேறு தலைப்புகளில் ஐந்தாயிரத்துக்கும் அதிகமாக நூல்கள் இடம்பெற்றுள்ளன. திராவிட இயக்கம் குறித்த ஆய்வுகளுக்குப் பயன்படும் வகையிலான ஆவண நூல்களும் இங்கு வைக்கப்பட்டுள்ளன. திராவிட இயக்கம் குறித்த விமர்சனங்கள், அவதூறுகளுக்குப் பதிலளிக்கும் வகையிலான நூல்கள் சேகரிக்கப்பட்டு, ஒரே இடமாக கொண்டுவரப்பட்டுள்ளதால், இந்த நூலகம் சிறப்புப் பெறுகிறது.

பொதுமக்கள் பயன்பாட்டுக்கான நூலகமாக இருந்தாலும், உறுப்பினராகவும் சேரலாம். வாரத்தின் 7 நாட்களிலும் காலை 10 மணி முதல் மாலை 5 மணிவரை நூல்களை எடுத்து வாசிக்கலாம். திராவிட இயக்கத்தின் அறிவுப் பங்களிப்புகளில் நூலகம், வாசிப்பு இயக்கங்கள் பெரும் பணியாற்றியவை. அந்த வகையில், நூற்றாண்டு கண்ட இதழ் பெயரில், அமைக்கப்பட்ட நூலகம், தலைநகரில் கருத்தியல் கருவூலமாகத் திகழட்டும்.

நன்றி: முரசொலி 15.08.2024

## கழகத் தொடக்கநாளில் ஜாதியை ஒழிக்க உறுதியேற்பு!



### சென்னை:

திராவிடர் விடுதலைக் கழகத்தின் 13ஆம் ஆண்டு தொடக்க நாளை முன்னிட்டு சென்னை மாவட்டக் கழக சார்பில் 12.08.2024 திங்கட்கிழமை மாலை 5 மணியளவில் இராயப்பேட்டையில் உள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்நிகழ்விற்கு கழகப் பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் தலைமை வகித்து, கழகக் கொடியை ஏற்றிவைத்தார்.

பின்னர் தோழர்கள் அனைவரும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

இதில் கழக மாநில - மாவட்ட - பகுதிக் கழகப் பொறுப்பாளர்கள் மற்றும் கழகத் தோழர்கள் திரளாகக் கலந்துக் கொண்டனர்.

### கோவை:

திராவிடர் விடுதலைக் கழகத்தின் 13ஆம் ஆண்டு தொடக்க நாளை முன்னிட்டு கோவை மாவட்டக் கழக சார்பில் காந்திபுரத்தில் உள்ள பெரியார் சிலைக்கு சூலூர் தமிழ்ச்செல்வி தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

பின்னர் கழக மாநகரத் தலைவர் நிர்மல் குமார் உறுதிமொழி வாசிக்க கழகத் தோழர்கள் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.




மேலும் கழகம் கடந்துவந்த பயணத்தையும், எதிர்காலப் பணிகள் குறித்தும் மாவட்டத் தலைவர் மேட்டுப்பாளையம் இராமச்சந்திரன், மாவட்டச் செயலாளர் சூலூர் பன்னீர்செல்வம், மாநகரச் செயலாளர் வெங்கட் ஆகியோர் உரையாற்றினார்கள்.

நிகழ்வில் உக்கடம் கண்ணன் கோவை மாநகரக் கழக வளர்ச்சி நிதியாக ரூ.500/- வழங்கினார். இதில் கிருஷ்ணன், மாதவன், இராஜாமணி, ஸ்டாலின், சதீஷ், நவீன் ஆகியோர் பங்கேற்றனர்.

### சேலம்:

சேலம் மாநகரக் கழக சார்பில் கழகத்தின் 13வது ஆண்டு தொடக்க நாளை முன்னிட்டு 12.08.2024 அன்று சேலத்தில் உள்ள பெரியார் சிலைக்கு சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் டேவிட் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. பின்னர் அனைவரும் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.



இதில் நகரத் தலைவர் மோ.பாலு, நகரச் செயலாளர் இரா.ஆனந்தி, நகர அமைப்பாளர் த.தேவராஜ், நகரப் பொருளாளர் ஜோ.பிரபு, பரமேஷ்குமார், வெற்றிமுருகன், குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## தலையங்கம்

# அதானிக்கு கடிவாளம் எப்போது?

அதானிக் குழுமம் பங்குச்சந்தையில் பல்வேறு முறைகேடுகளில் ஈடுபட்டுள்ளது என அமெரிக்காவைச் சேர்ந்த ஹிண்டன்பர்க் நிறுவனம் கடந்த ஆண்டு குற்றம் சாட்டியிருந்தது. தொட்டதற்கெல்லாம் எதிர்க்கட்சிகள் மீதும், பல்வேறு நிறுவனங்கள் மீதும் அமலாக்கத்துறை, வருமான வரித்துறையை ஏவி விசாரணை நடத்தும் ஒன்றிய அரசு, அதானியிடம் விசாரணை நடத்த மறுத்தது. அதானி மீதான குற்றச்சாட்டுகள் குறித்து கேள்வி எழுப்பியவர்களைத் தேசவிரோதிகளாகச் சித்தரித்தது. அதானி குறித்து நாடாளுமன்றத்தில் பேசிய ராகுல் காந்தி, மேற்கு வங்கத்தின் மகுவா மொய்த்ராவை தகுதிநீக்கம் செய்து பழி தீர்த்தது. அதையும்தாண்டி உச்சநீதிமன்றத்திற்கு வழக்குகள் சென்றபோது, பங்குச்சந்தை ஒழுங்குமுறை வாரியமான செபி விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டது.

3 மாதங்களுக்குள் விசாரணையை முடிக்க உச்சநீதிமன்றம் அறிவுறுத்தியிருந்தது. ஆனால் இன்றுவரை முறையான விசாரணை நடைபெறவில்லை. அதற்கான காரணம் என்ன என்பதையும் ஹிண்டன்பர்க் நிறுவனம் இப்போது அம்பலப்படுத்தியுள்ளது. அதானிக் குழுமத்தின் நிதி முறைகேடுகளுடன் தொடர்புடைய வெளிநாட்டு நிறுவனங்களில் செபி தலைவர் மாதபி புரிபுச் மற்றும் அவரது கணவர் தவல் புச் ஆகியோர் பங்குகளை வைத்துள்ளதாகக் குற்றம்சாட்டியுள்ளது ஹிண்டன்பர்க் நிறுவனம். செபி தலைவராக மாதபி நியமிக்கப்படுவதற்குச் சில வாரங்களுக்கு முன்பு, மொரீசியஸைச் சேர்ந்த நிதி நிர்வாக நிறுவனமான ட்ரைடென்ட் டிரஸ்டுக்கு, 'குளோபல் டைனமிக் ஆப்பர்சூனிட்டிஸ் ஃபண்ட்'இல் தானும் தனது மனைவியும் செய்துள்ள முதலீடுகள் தொடர்பாக தவல் புச் மின்னஞ்சல் அனுப்பியுள்ளார். அதனடிப்படையில்தான் இந்தக் குற்றச்சாட்டை ஹிண்டன்பர்க் நிறுவனம் வைத்துள்ளது.

2022ஆம் ஆண்டு மாதபி புச் செபி தலைவரான உடனேயே, அவரைக் கவுதம் அதானி சந்தித்ததும் பலத்த சந்தேகத்தை ஏற்படுத்துகின்றன. இந்தச் சந்திப்பு நடைபெற்ற வேளையில்தான் அதானிக் குழுமத்தின் மோசடிகள் குறித்து செபி விசாரணை நடத்திக் கொண்டிருந்தது. இப்போதாவது அதானி – செபியின் கூட்டு மோசடிகள் குறித்து விசாரிக்க வேண்டுமென்று வலியுறுத்தியுள்ள காங்கிரஸ் கட்சி, வரும் 22–ஆம் தேதி அகில இந்திய அளவில் ஆர்ப்பாட்டம் நடத்தப்போவதாகவும் அறிவித்திருப்பது வரவேற்கத்தக்கது. ஆனால் அதானியின் மோசடிகள் குறித்து எழுப்பப்படும் குரல்கள், இந்தியாவின் பொருளாதாரத்தைச் சீர்குலைக்கிறது எனச் சப்பைக்கட்டு கட்டுகிறது பாரதிய ஜனதா கட்சி. அதானிக்கு ஏதாவது பிரச்னை என்றால்தான் பாஜகவுக்கு இந்தியப் பொருளாதாரமே நினைவுக்கு வருகிறது போலும். 2014–இல் பாஜக ஆட்சிக்கு வருவதற்கு முன்பு அதானியின் சொத்து மதிப்பு 4 பில்லியன் டாலர். ஆனால் 2022–இல் 150 பில்லியன் டாலர். அதானியின் சொத்து கொழுப்பது மட்டும்தான் இந்தியம் பொருளாதாரமா? அதானியின் சொத்துக்கள் இந்தியப் பொருளாதாரத்தை உயர்த்துவதை விட, ஷெல் கம்பனிகளில்தான் (மோசடி அல்லது வரி ஏய்ப்பு செய்து பணம் திரட்டும் நிறுவனங்கள்) சென்று குவிகிறது என்பதற்கான ஆதாரங்கள் கடந்த ஆண்டு வெளியான பண்டோரா பேப்பர்ஸ் அறிக்கையில் உறுதியானதையும் இங்கு நினைவூட்ட வேண்டியுள்ளது.

பணமதிப்பழிப்பு, சரக்கு மற்றும் சேவை வரி என பெரிய குண்டுகளை இந்தியப் பொருளாதாரத்தின் மீது வீசி, ஒட்டுமொத்தத் தொழில்துறையையும் சீர்குலைத்தது பாஜகதான் என்பதை மக்கள் மறக்க மாட்டார்கள். தனி நபர் சேமிப்பு கடந்த 5 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு குறைந்துவிட்டதாக, ஜூலை மாதத்தில் ஒன்றிய அரசின் புள்ளியியல் மற்றும் திட்ட அமலாக்கத்துறை அறிக்கை கூறியது. நாட்டில் இன்னமும் 44 விழுக்காட்டினர் 3 வேளை உணவு கிடைக்காமல் தவிப்பதாக இந்துஸ்தான் டைம்ஸ் சமீபத்தில் ஆய்வுக்கட்டுரை ஒன்றை வெளியிட்டது. 16 விழுக்காடு இளைஞர்களுக்கு வேலை இல்லை. 125 நாடுகளுக்கான சர்வதேச பட்டினிக் குறியீட்டில் இந்தியாவுக்கு கிடைத்திருக்கும் இடம் 111. ஆனால் இந்தப் புள்ளி விவரங்களை அடியோடு மறுத்து, "ஆய்வுகள் நடத்தப்பட்ட விதம் தவறு, ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட மாதிரிகள் தவறு" என்று பதில் சொல்வதுதான் ஒன்றிய பாஜக அரசின் வாடிக்கை.

இவற்றையெல்லாம் நிவர்த்தி செய்து, கல்வி – தொழில் வளம், வேலைவாய்ப்புகளை உருவாக்குவது மட்டுமே பொருளாதாரத்தை வலிமைப்படுத்தும். அதானியின் மோசடிகளுக்கு துணைபுரிவது ஒருபோதும் இந்தியப் பொருளாதாரத்தை உயர்த்துவதற்குப் பயன்படாது. அதானி துறைமுகம், அதானி விமான நிலையம், அதானி ரயில், அதானி மின்சாரம் என நாட்டின் அதிமுக்கியத்துவம் வாய்ந்த துறைகள் ஒவ்வொன்றாக அதானியிடம் வீழ்ந்து கொண்டிருக்கிறது. அதானி தனது மோசடிகளால் உலக அரங்கில் வீழ்ந்து கொண்டிருக்கிறார். எல்.ஐ.சி–யின் 38,471 கோடி ரூபாய் அதானி நிறுவனங்களில் முதலீடு செய்யப்பட்டிருக்கிறது. லட்சக்கணக்கான சிறு முதலீட்டாளர்கள் பங்குச்சந்தையில் அதானி குழுமத்தின் பங்குகளை வாங்கியிருக்கிறார்கள். அதனால் அதானியின் மோசடிகளுக்கும் நமக்கும் என்ன சம்மந்தம் என மக்கள் ஒதுங்கியிருக்க முடியாது. அதானியை விசாரணைக்குட்படுத்த மோடி அரசுக்கு நெருக்கடி தர வேண்டியது காலத்தின் கட்டாயம்.



## அடக்குமுறைகளைச் சந்தித்த "குடிஅரசு"

*1922 ஆம் ஆண்டு கள்ளுக்கடை மறியலில் ஈடுபட்டு, கோவை சிறையில் பெரியார் அடைக்கப்பட்டபோது, அவரும் அவருடன் சிறையில் உடனிருந்த ஈரோடு கருங்கல்பாளையம் வழக்கறிஞர் தங்கப்பெருமாள் பிள்ளையும் இணைந்து சிந்தித்த திட்டத்தின் விளைச்சல்தான் 'குடிஅரசு.' சிறையிலிருந்து வெளியே வந்தவுடன், 1923 ஆம் ஆண்டிலேயே ' குடிஅரசை' பதிவுசெய்த பெரியார், 02.05.1925 ஈரோட்டில் ஞானியார் அடிகளைக் கொண்டு வெளியிட்டார். ஞாயிறுதோறும் ஓரணா விலையில் வெளிவரத் தொடங்கியது குடி அரசு. முதலில் அட்டையில் பாரதத் தாய், இராட்டை சுற்றும் காந்தியார், நெசவு செய்யும் பெண், உழவு செய்யும் விவசாயி, சுத்தியால் அடிக்கும் தொழிலாளி, மூட்டை சுமக்கும் பாட்டாளி படங்களோடும், 'எல்லோரும் ஓர்குலம், எல்லோரும் ஓர் இனம்,' 'சாதிகள் இல்லையடி பாப்பா' என்ற பாரதி பாடல்களோடும் குடி அரசு வெளிவரத் தொடங்கியது.*

*தொடக்கக் காலங்களில் வார இதழின் 12 பக்கங்களையும் தாமே எழுதி வந்ததாய்ப் பெரியார் குறிப்பிடுகிறார். ( குடிஅரசு 18.04.1926 ) பின்னர், ம.சிங்காரவேலர், சாமி.சிதம்பரனார், கைவல்ய சாமியார், மயிலை.சீனி.வேங்கடசாமி, சா.குருசாமி, சந்திரசேகர பாவலர், ஈழத்து சிவானந்த அடிகள், பண்டிதர் முத்துசாமி, கோவை அய்யாமுத்து, ஜனக சங்கர கண்ணப்பர், அ.இராகவன், ஆர்.நீலாவதி, அ.அன்னபூரணி போன்ற சிந்தனையாளர்களின் கட்டுரைகளும் பாரதிதாசன், ஜீவானந்தம் போன்ற கவிஞர்களின் கவிதைகளும் இடம் பெற்றுள்ளன.*

*1925 இல் தொடங்கிய 'குடிஅரசு' 1933ஆம் ஆண்டில் அரசின் அடக்குமுறைக்கு உள்ளானது.* **"இன்றைய ஆட்சி ஏன் ஒழிய வேண்டும்?"** *என்ற தலைப்பில் பெரியார் எழுதிய தலையங்கத்துக்காக பிரிட்டிஷ் ஆட்சி பெரியார் மீது அரசு துரோகக் குற்றச்சாட்டுகளின் கீழ் வழக்குத் தொடர்ந்தது. 9 மாத சிறைத் தண்டனையும் ரூ.300 அபராதமும் விதிக்கப்பட்டு பெரியார் சிறையேகினார். ' குடிஅரசி'ன் பதிப்பாளர் பெரியாரின் தங்கை கண்ணம்மாளும் 6 மாத சிறைத் தண்டனைக்கு உள்ளானார். ரூ.100 அபராதமும் விதிக்கப்படுகிறது. இந்த நிலையில் 19.11.1933 – லிருந்து ' குடிஅரசு' தற்காலிகமாக நிறுத்தப் பட்டு மீண்டும் 13.01.1935 – லிருந்து வெளிவரத் தொடங்குகிறது. தொடர்ந்து 29.12.1940 வரை வெளிவந்த 'குடி அரசு' மீண்டும் நிறுத்தப்பட்டு 16.10.1943 – லிருந்து வெளிவரத்தொடங்கி, 1949 ஆம் ஆண்டில் மீண்டும் அரசின் ஒடுக்கு முறைக்கு உள்ளானது. மேலும் ரூ.3000 ஜாமீன் தொகை கேட்கவே ' குடி அரசு' விடைபெற்றுக் கொண்டது.*

*'குடிஅரசு' 1933ஆம் ஆண்டில் அடக்குமுறைக்குள்ளாகிய சூழ்நிலையில், "அடுத்தவாரம் 'குடிஅரசு' பத்திரிகை வரத் தவறும் பட்சத்தில் வேறு பத்திரிகை வெளிவரும்" என்ற அறிவிப்பு 19.11.1933 ஆம் நாளிட்ட 'குடிஅரசு' இதழிலேயே வெளிவந்து விடுகிறது. அறிவித்தது போலவே 'குடிஅரசி'ன் அடுத்த இதழ் வெளிவரவேண்டிய 26.11.1933ஆம் நாள் 'குடிஅரசு'க்கு பதிலாக 'புரட்சி' என்ற பெயரில் இதழ் வெளிவருகிறது. " குடிஅரசை ஒழிக்கச் செய்த முயற்சியால் 'புரட்சி' தோன்ற வேண்டியதாயிற்று. உண்மையிலேயே பாமர மக்களின் – அதாவது பெரும்பான்மையான மக்களின் ஆட்சியாகிய குடிஅரசுக்கு உலகில் இடமில்லையானால், கண்டிப்பாகப் புரட்சி தோன்றியேதான் ஆகவேண்டும்" என்ற அறிவிப்போடு 'புரட்சி' வெற்றிநடைபோடத் தொடங்கியது. " புரட்சி"யும் அடக்கு முறைக்குத் தப்பவில்லை. ஆசிரியர் பெயர் இல்லாமல் 'புரட்சி' வெளி யிட்டதற்காக வெளியீட்டாளர் சா.ரா. கண்ணம்மாள் மீது வழக்கு தொடரப்பட்டு 1000 ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டது. 1934ஆம் ஆண்டில் மட்டும் 3 வழக்குகள் அடுக்கடுக்காய் தொடரப்பட்டன. அரசால் ஜாமீன்தொகை ரூ.2000 கேட்கப்பட்டது. ரூ.5000 – த்துக்கும் மேல் இழப்பைச் சந்தித்த 'புரட்சி' ஏடு 17.06.1934 இதழோடு நிறுத்தப்படும் நிலைக்கு வந்தது.*

*'புரட்சி' ஏடு வெளிவரும்போதே 15.04.1934 முதல் 'பகுத்தறிவு' எனும் நாளிதழைத் தொடங்கினார். ஆனால், அது வெளிவந்தது குறுகிய காலம்தான். 27.05.1934 ஆம் நாளோடு அந்த நாளேடு நின்று போனது.*


*பெரியார் ஓய வில்லை. புரட்சி நின்றபின் சுமார் 2 மாத இடை வெளியில் 26.08.1934 முதல் 'பகுத்தறிவு' வார இதழ் வெளிவரத் தொடங்கியது. 1934 மே 20இல் பெரியார் சிறையிலிருந்து விடுதலையானார். பகுத்தறிவு வார ஏட்டைத் தொடங்கும் போதே பெரியார் எழுதினார்.*

**"முடிவாய்க் கூறுமிடத்து, 'பகுத்தறிவு' மனித ஜீவாபிமானத்துக்கு மக்களை வழிநடத்திச் செல்லுமேயொழிய எக்காரணம் கொண்டும் மக்கள் பின் நடந்து செல்லும்படியான அடிமை வாழ்வில் உயிர் வாழாது என்பதேயாகும்." ( பகுத்தறிவு – தலையங்கம் – 26.8.1934)**

*06.01.1935 இல் பகுத்தறிவு வார ஏடு நின்றுபோய் விடுகிறது. "பகுத் தறிவு" ஏட்டையும் அரசு விட்டுவைக்கவில்லை. பகுத்தறிவு வார இதழ் நின்று, மாத இதழாகவும் காலணா தினசரிப் பதிப்பாகவும் நடத்த முயன்றபோது பகுத்தறிவு இதழுக்கும் உண்மை விளக்கம் அச்சகத்துக்கும் இரண்டாயிரம் ரூபாய் பிணையத் தொகை கட்டவேண்டும் என்று 29.01.1935 இல் அரசு ஆணை பிறப்பித்தது. பிறகு மாத ஏடாக வெளிவரத் தொடங்கியது. 1935 இல் தொழி லாளர் தினமான மே முதல் நாளிலிருந்து பகுத்தறிவு மாத இதழாக பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகத்தின் சார்பில் வெளிவரத் தொடங்கியது.*

*01.06.1935 முதல் வாரம் இருமுறை இதழாக 'விடுதலை' வெளிவரத் தொடங்கியது. அப்போது 'குடிஅரசும்' வார இதழாக வெளிவந்து கொண்டிருந்தது. 29.05.1937 இதழோடு விடுதலை வாரம் இருமுறை பதிப்பு நிறுத்தப்படுகிறது. 01.07.1937 முதல் 'விடுதலை' நாளேடாக வெளிவருகிறது. அதற்குமுன் ஜஸ்டிஸ் கட்சி சார்பில் 'விடுதலை' ஏடு வெளி வந்து பிறகு நின்றுபோய் இருந்தது குறிப்பிடத்தக்கது. பெரியார் இவ்வளவு அடக்குமுறைகளை எதிர்கொண்டே பத்திரிகைகளை நடத்தியுள்ளார்.*

# மோடியின் போலித் தமிழ்ப்பாசம்; அம்பலப்படுத்திய ஆர்.டி.ஐ.!



சமஸ்கிருதக் கல்வி நிறுவனங்கள் மத்திய பல்கலைக்கழகங்களாக மாற்றியமைத்த ஒன்றிய அரசு சமஸ்கிருதத்தைத் தீவிரமாக வளர்க்க வேண்டும் என்பதற்காக நிகர்நிலை பல்கலைக்கழகத் தகுதியில் இருந்த சமஸ்கிருதக் கல்வி நிறுவனங்களை மத்திய பல்கலைக்கழகங்களாக கடந்த 2019ஆம் ஆண்டு மத்திய அரசு மாற்றி இருக்கிறது. டெல்லி மத்திய சமஸ்கிருத பல்கலைக்கழகத்துக்கு 2021ஆம் ஆண்டில் செலவிடப்பட்ட தொகை ரூ.201.96 கோடி ஆனால் அதற்கு அடுத்த ஆண்டு அதாவது 2022ம் ஆண்டில் அந்த நிதி ரூ.324 கோடியாக உயர்த்தப்பட்டது. இந்தியாவின் எந்த மொழிக்கும் இதுபோல நிதி அதிகரிக்கப்படவில்லை.

‘தமிழ் மொழியை உலகெங்கும் கொண்டு செல்ல வேண்டும்’

இந்தியாவில் சமஸ்கிருதத்தை தாய்மொழியாகக் கொண்ட ஒரு நபருக்கு ரூ.11 லட்சம் செலவிடப்படுகிறது. ஆனால் மற்ற மொழிகளைத் தாய்மொழியாகக் கொண்ட மக்களுக்கு ஒரு நபருக்கு ரூ.13.50 மட்டுமே செலவிடப்படுகிறது.

தேர்தல் நேரத்தில் மட்டும் அடிக்கடி வந்து ஒரு திருக்குறளைச் சொல்லியும், உலகின் மூத்த மொழி தமிழ் என்று பெருமை கொண்டும் தமிழ் மொழிக்காக அத்தனையும் செய்பவர்போல காட்டிக்கொண்டார் பிரதமர் மோடி. ஆனால் தற்போது அந்த தமிழ்மொழிக்கு குறைந்த அளவில்தான் ஒன்றிய அரசு நிதி ஒதுக்கி இருக்கும் அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

ஒன்றிய பாஜ அரசு தொடர்ச்சியாக தமிழ்நாட்டை வஞ்சித்து வருகிறது.. ரயில்வே நிதி, வெள்ள நிவாரண நிதி, வளர்ச்சி திட்டங்களுக்கான நிதி, மெட்ரோ ரயில் திட்ட நிதி என எதற்கும் தமிழ்நாட்டுக்கு நிதியை ஒதுக்குவதில் ஒன்றிய அரசு பாரபட்சம் காட்டி வருகிறது. தேவையான நிதிகளைகூட வழங்காமல் ஏதோ தமிழ்நாட்டினர் அந்நியர்கள் என்ற அளவில்தான் ஒன்றிய அரசு வைத்துள்ளது. இதற்கு முக்கிய காரணம் தமிழ்நாட்டு மக்கள் பாஜவைப் புறந்தள்ளி வைத்திருப்பதால்தான். எதிர்க்கட்சியினர் ஆளும் மாநிலமாக இருப்பதால் தமிழ்நாட்டுக்கு எதுவுமே செய்யக்கூடாது என்ற மாற்றாந்தாய் மனப்பான்மையுடன் ஒன்றிய அரசு செயல்பட்டு வருகிறது.

நாடாளுமன்ற தேர்தலின்போது தமிழ்நாட்டுக்கு அடிக்கடி வந்து தமிழர்கள் மீது பாசம் கொண்டவர்போல பிரதமர் காட்டிக்கொண்டார். ஆனால் அவர்கள் நினைத்தது எதுவும் நடக்காததால் தற்போது தமிழ்நாட்டில் நடைபெறும் திட்டப்பணிகளுக்கு ஒதுக்கிய நிதியைக்கூட குறைத்திருப்பது தெரியவந்துள்ளது. தேர்தல் நேரத்தில் மட்டும் அடிக்கடி வந்து ஒரு திருக்குறளைச் சொல்லியும், உலகின் மூத்த மொழி தமிழ் என்று பெருமை கொண்டும் தமிழ் மொழிக்காக அத்தனையும் செய்பவர்போல காட்டிக்கொண்டார் பிரதமர் மோடி. ஆனால் தற்போது அந்தத் தமிழ்மொழிக்கு குறைந்த அளவில்தான் ஒன்றிய அரசு நிதி ஒதுக்கி இருக்கும் அதிர்ச்சித் தகவல் வெளியாகியுள்ளது.

இந்திய மொழிகளின் வளர்ச்சிக்கு ஒன்றிய அரசு ஒதுக்கிய நிதி குறித்து கோவையைச் சேர்ந்த மறுமலர்ச்சி மக்கள் இயக்கத் தலைவர் வே.ஈஸ்வரன் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் (ஆர்டிஐ) தகவல்கள் கேட்டிருந்தார். அதற்கு ஆர்டிஐ தந்துள்ள பதில் அதிர்ச்சியளித்து உள்ளது. 24 ஆயிரம் பேர் தாய் மொழியாய் பேசும் சமஸ்கிருதத்துக்கு மட்டும் கடந்த 10 ஆண்டுகளில் ரூ.2,869 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் 8 கோடிப் பேர் தாய் மொழியாய் பேசும் தமிழுக்கு வெறும் ரூ.100 கோடி மட்டுமே ஒன்றிய அரசு ஒதுக்கி உள்ளது.

**அதன் விவரம் வருமாறு:**

இந்தியாவில் மொழிகளின் வளர்ச்சிக்காக முதன் முதலில் ஒன்றிய அரசால் ஏற்படுத்தப்பட்ட கல்வி நிறுவனங்கள் டெல்லியில் உள்ள மத்திய இந்தி இயக்குனரகம் மற்றும் ஆக்ராவில் உள்ள மத்திய இந்தி கல்வி நிறுவனம் ஆகியவையாகும். இவை இரண்டும் 1960ஆம் ஆண்டு தொடங்கப்பட்டவையாகும். ஒருகாலகட்டத்தில் ஒன்றிய அரசு இந்தியா முழுவதும் இந்தியை மிக தீவிரமாக திணித்தபோதும் இந்த நிறுவனங்களின் வளர்ச்சி பெரிய அளவில் இல்லை. இந்தியாவில் இந்தியை தாய்மொழியாக பேசக்கூடியவர்கள் 52 கோடி பேர். கடந்த 10 ஆண்டுகளில் இந்த 2 இந்தி மொழி வளர்ச்சி கல்வி நிறுவனங்களுக்கும் சேர்த்து ஒன்றிய அரசு இந்தி வளர்ச்சிக்காக செலவிட்ட தொகை ரூ.646 கோடி மட்டுமே.

இந்தியாவில் உருது மொழி பேசுகின்ற மக்கள் 5 கோடி பேர் இருக்கிறார்கள். இந்த மொழியின் வளர்ச்சிக்கு ஒன்றிய அரசால் உருவாக்கப்பட்ட நிறுவனம் தேசிய உருது மொழி வளர்ச்சி நிறுவனம். இந்த நிறுவனம் 1996ம் ஆண்டு தொடங்கப்பட்டது. இதற்காக கடந்த 10 ஆண்டுகளில் ஒன்றிய அரசு செலவிட்ட தொகை ரூ.777 கோடியாகும். இந்தியாவில் 20 லட்சம் மக்களால் பேசப்படுகின்ற சிந்திமொழி வளர்ச்சிக்காக 1994ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட தேசிய சிந்தி மொழி வளர்ச்சி நிறுவனத்திற்காக கடந்த 10 ஆண்டுகளில் ஒன்றிய அரசு செலவிட்ட தொகை ரூ.40 கோடியாகும்.

உலகின் மூத்த மொழியாம் தமிழ் மொழி வளர்ச்சிக்காக 2008ஆம் ஆண்டு செம்மொழி தமிழ் ஆய்வு மத்திய நிறுவனம் உருவாக்கப்பட்டது. அதுவரை மைசூரில் உள்ள இந்திய மொழிகளின் கல்வி நிறுவனத்தின் ஒரு பகுதியாக தமிழ் ஆய்வு மையம் இருந்தது. இந்தியாவில் 8 கோடிப் பேர் பேசும் செம்மொழியாம் தமிழ் மொழி வளர்ச்சிக்காக கடந்த 10 ஆண்டுகளில் செலவிடப்பட்ட தொகை ரூ.100 கோடி மட்டுமே.

தமிழ், இந்தி, சிந்தி, உருது, சமஸ்கிருதம் தவிர்த்து தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஒரியா, மராத்தி, பெங்காலி உள்ளிட்ட அனைத்து மொழிகளின் வளர்ச்சிக்காக செயல்படும் ஒன்றிய அரசின் ஒரே நிறுவனம் மைசூரில் உள்ள மத்திய இந்திய மொழிகளின் கல்வி நிறுவனம் ஆகும். இதற்கு இந்தியா முழுவதும் பல இடங்களில் கிளைகள் உள்ளது. இந்த நிறுவனம் 1969ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. மத்திய சமஸ்கிருத பல்கலைக்கழகம் தொடங்குவதற்கு முன்பே இது தொடங்கப்பட்டதாகும். இந்தியா முழுவதும் 70 கோடிக்கு மேல் தாய் மொழியாகக் கொண்டுள்ள மற்ற அனைத்து மொழிகளுக்கும் சேர்த்து கடந்த 10 ஆண்டுகளில் ஒன்றிய அரசு செலவிட்ட தொகை ரூ.275 கோடி.

இந்தியாவில் சமஸ்கிருதத்தைத் தாய் மொழியாகக் கொண்ட மக்கள் 24 ஆயிரத்து 821 பேர் மட்டுமே என புள்ளி விவரங்கள் தெரிவிக்கிறது. சமஸ்கிருதம் இந்தியாவின் எந்த மாநிலத்தின் மொழியும் அல்ல. ஆனால் சமஸ்கிருத மொழி வளர்ச்சிக்காகக் கடந்த 10 ஆண்டுகளில் ஒன்றிய அரசு செலவிட்ட தொகை ரூ.2,869 கோடி. இதன்மூலம் மொழிகள் வளர்ச்சிக்காக ஒன்றிய அரசு ஒதுக்கும் நிதி பாரபட்சமாக உள்ளது என்பது தெள்ளத்தெளிவாகத் தெரிகிறது. இந்தியாவில் சமஸ்கிருதம் தாய்மொழியாகக் கொண்ட ஒரு நபருக்கு ரூ.11 லட்சம் செலவிடப்படுகிறது. ஆனால் மற்ற மொழிகளைத் தாய்மொழியாக கொண்ட மக்களுக்கு ஒரு நபருக்கு ரூ.13.50 மட்டுமே செலவிடப்படுகிறது. தெலுங்கு, கன்னடம், மலையாளம் போன்ற மொழிகளுக்கு மிக மிகக் குறைவான நிதியே ஒதுக்கப்படுகிறது.

இந்திய அரசு அனைத்து இந்திய மொழிகளுக்கும் செலவிடுகின்ற தொகையில் 61 சதவீதம் சமஸ்கிருத மொழிக்கு மட்டுமே செலவிடுகிறது என்பதை இந்தத் தகவல் அறியும் உரிமைச் சட்ட தகவல்கள் மூலம் தெரியவந்திருக்கிறது. தமிழ் மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் இந்தியாவின் பல மாநிலங்களிலும், உலகின் பல்வேறு நாடுகளிலும் நீண்ட நெடுங்காலமாக வசித்து வருகிறார்கள். அங்குள்ள குழந்தைகளுக்கு தமிழையும், தமிழ் மொழியின் தொன்மைகளையும், தமிழ் மொழியில் உள்ள இலக்கிய இலக்கணங்களையும் கொண்டு சேர்ப்பது ஒன்றிய அரசின் கடமையாகும். ஆனால் இந்தியாவைச் சமஸ்கிருத நாடாக உருவாக்குகின்ற வகையில் ஒரு மொழிக்கு மட்டுமே முன்னுரிமை கொடுப்பது இந்தியாவின் பன்முகத்தன்மையைச் சிதைப்பதாகும்.

**மறுமலர்ச்சி மக்கள் இயக்கத் தலைவர் வே.ஈசுவரன் கூறியதாவது:** உலகின் பல்வேறு நாடுகளிலும் இந்தியாவின் அனைத்து மாநிலங்களிலும் செம்மொழித் தமிழ் வளர்ச்சி கல்வி நிறுவனங்களை உருவாக்க வேண்டும். தமிழ்மொழியில் உள்ள சிலப்பதிகாரம், திருக்குறள் போன்ற புத்தகங்களை உலகின் அனைத்து மொழிகளிலும் மொழிமாற்றம் செய்து உலகெங்கும் கொண்டு செல்வது இந்தியாவிற்கு பெருமை சேர்ப்பதாகும். தமிழ் மொழியில் உள்ள படைப்புகளை ஆய்வு மேற்கொள்வதற்கும், ஆய்வு செய்கிறவர்களுக்கு நிதி உதவி செய்யவேண்டும்.

சமஸ்கிருதத்தை வளர்ப்பதற்கு எடுக்கிற முயற்சியைபோல இந்தியாவில் உள்ள ஒவ்வொரு மொழியின் வளர்ச்சிக்கும் ஒன்றிய அரசு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும். அனைத்து மொழிகளுக்கும் பாரபட்சம் இல்லாமல் நிதி ஒதுக்கப்படவேண்டும். அடுத்த 5 ஆண்டுகளில் ரூ.3 ஆயிரம் கோடி நிதி ஒதுக்கீடு செய்து தமிழ் மொழியை உலகெங்கும் கொண்டு செல்லவும், அதிக தமிழ்மொழி ஆராய்ச்சிகளை ஊக்குவிக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தி பிரதமர் மோடிக்கு 10 ஆயிரம் தபால் அட்டைகளை அனுப்பத் திட்டமிட்டுள்ளோம். முதல் கட்டமாக ஆயிரம் தபால் அட்டைகளை அனுப்பியுள்ளோம். தொடர்ந்து பல கல்லூரிகளுக்குச் சென்று பூர்த்தி செய்த தபால் அட்டைகளில் கையெழுத்து பெற்று பிரதமருக்கு அனுப்ப உள்ளோம். இவ்வாறு அவர் கூறினார்.

date of publication - every thursday tamil weekly Reg.No.tn/cc(S)Dn/459/22-24 licenced to post wpp no.tn/PMG(ccR)/WPP-462/22-24
puratchi periyar muzhakkam registered with the registrar of newspaper for india under no.tntam/2002/07776

# ஜாதி – குடி போதைக்கு எதிரானப் பரப்புரைக்குத் தயாராகும் கழகம்!

## மாவட்டக் கலந்துரையாடல் கூட்டங்களில் பேரெழுச்சி!



**தர்மபுரி:** தர்மபுரி மாவட்டக் கலந்துரையாடல் கூட்டம் 07.08.2024 அன்று தர்மபுரி B.அக்ரகாரத்தில் நடைபெற்றது.

கழகத் தலைவர் கொளத்தூர் மணி கலந்துரையாடல் கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். கூட்டத்தில் கழகத்தின் அடுத்தக்கட்ட செயல்பாடுகள் குறித்து ஆலோசனைகள் நடைபெற்றது.

நிறைவாகக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தர்மபுரி மாவட்டத் தலைவராக வெ.வேணுகோபால், தர்மபுரி மாவட்டச் செயலாளராக கு.நாகராஜ், மாவட்ட அமைப்பாளராக மா.பரமசிவம், பென்னாகரம் ஒன்றிய அமைப்பாளராக இரா.சரவணன் (B.அக்ரஹாரம்), காரிமங்கலம் ஒன்றிய அமைப்பாளராக கோ.செந்தில்குமார், நல்லம்பள்ளி ஒன்றிய அமைப்பாளராக மு.இராமதாஸ், தர்மபுரி ஒன்றிய அமைப்பாளராக பி.முத்துலட்சுமி, அரூர் ஒன்றிய அமைப்பாளராக பெருமாள், ஏரியூர் ஒன்றிய அமைப்பாளராக மா.அசோக்குமார், தமிழ்நாடு அறிவியல் மன்ற பொறுப்பாளராக சா.வையாபுரி ஆகியோரை நியமனம் செய்தார்.



**சேலம் கிழக்கு:** சேலம் கிழக்கு மாவட்டக் கலந்துரையாடல் கூட்டம் 07.08.2024 அன்று மாலை 6 மணியளவில் கருப்பூரில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்றது.

கடவுள் மறுப்பு வாசகத்துடன் தொடங்கிய இந்தக் கலந்துரையாடல் கூட்டத்தில் இயக்க வளர்ச்சி மற்றும் கழகத்தின் அடுத்த கட்ட செயல் திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

இதில் கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசிகுமரன், கழக அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி, கழகப் பொருளாளர் துரைசாமி, சேலம் கிழக்கு மாவட்டத் தலைவர் க.சக்திவேல், சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் டேவிட், சேலம் கிழக்கு மாவட்ட அமைப்பாளர்கள் பெருமாள், முத்துமாணிக்கம், மாவட்ட இளைஞரணிச் செயலாளர் வெற்றிமுருகன், மாவட்ட இளைஞரணித் தலைவர் தங்கதுரை, மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் தேவபிரகாஷ், மாநகரச் செயலாளர் ஆனந்தி, மாநகர அமைப்பாளர்கள் தேவராஜ், ஜங்ஷன் பாலு, இளம்பிள்ளை ஒன்றிய பொறுப்பாளர்கள், மற்றும் தோழர்கள், ஆத்தூர் பகுதி பொறுப்பாளர்கள் கழக பரப்புரை சுற்றுப்பயணத்தில் பேசப்பட வேண்டிய செய்திகளும், வலியுறுத்தப்பட வேண்டிய கோரிக்கைகளும், பரப்புரைச் சுற்றுப்பயணத்தின் தலைப்புகளையும் குறித்து தங்கள் கருத்தைப் பகிர்ந்து கொண்டனர்.

நிறைவாகக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி அவர்கள் பேசுகையில்.. இளைஞர்கள் மத்தியில் போதைப்பொருள் கலாச்சாரம் வேகமாகப் பரவி வரும் சூழலில் அதற்கு எதிரான பரப்புரைகளைக் கழகத் தோழர்கள் திவீரமாக மேற்கொள்ள வேண்டும் எனவும், ஆணவப் படுகொலையைத் தடுப்பதற்கான தனிச்சட்டம் இயற்றுவதில் உள்ள நடைமுறைச் சிக்கல்களைக் குறித்து நீண்ட விளக்கம் கொடுத்தார், அரசு அலுவலகங்களில் உள்ள மதச் சார்ந்த குறியீடுகளை நீக்குவதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் பள்ளிக் குழந்தைகளிடையே பெரியார் இயக்க வரலாற்றையும் போதைக்கு எதிரான விழிப்புணர்வையும் கொண்டு சேர்க்கும் திட்டங்களைக் குறித்தும் விவாதித்தார் சேலம் மாவட்டத்திற்கு என வண்டி வாங்குவதைக் குறித்து மாவட்டத் தோழர்கள் ஆலோசித்து வண்டி வாங்கிக் கொள்ளவும் எனவும் கழகத் தலைவர் தனது உரையில் குறிப்பிட்டுப் பேசினார்.

இதில் மாவட்ட - பகுதிக் கழக நிர்வாகிகள் மற்றும் கழக செயல்வீரர்கள் உள்ளிட்ட 40 க்கும் மேற்பட்டோர் பங்கேற்று தங்களது கருத்துகளைப் பகிர்ந்து கொண்டனர்.

இறுதியாக மாநகர அமைப்பாளர் தேவராஜ் நன்றி கூற கலந்துரையாடல் கூட்டம் நிறைவு பெற்றது.



**சேலம் மேற்கு:** சேலம் மேற்கு மாவட்டக் கழகக் கலந்துரையாடல் கூட்டம் 08.08.2024 அன்று காலை 10 மணியளவில் உக்கம்பருத்திக்காடு பெரியார் படிப்பகத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில் நடைபெற்றது.

கடவுள் மறுப்பு வாசகத்துடன் தொடங்கிய இந்தக் கலந்துரையாடல் கூட்டத்தில் இயக்க வளர்ச்சி மற்றும் கழகத்தின் அடுத்த கட்ட செயல் திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது.

இதில் கழகத் தலைமை நிலையச் செயலாளர் தபசிகுமரன், கழக அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி, கழகப் பொருளாளர் துரைசாமி, தலைமைக் குழு உறுப்பினர்கள் சூலூர் பன்னீர்செல்வம், காவை ஈசுவரன், சக்திவேல், சேலம் மேற்கு மாவட்டச் செயலாளர் கோவிந்தராசு, சேலம் மேற்கு மாவட்டத் தலைவர் சூரியகுமார் ஆகியோர் தங்களது கள அனுபவங்களையும், எதிர்காலப் பணிகள் குறித்தும் தங்களது கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டனர்.

நிறைவாகக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி பேசுகையில், இளைஞர்கள் மத்தியில் போதைப்பொருள் கலாச்சாரம் வேகமாகப் பரவி வரும் சூழலில் அதற்கு எதிரான பரப்புரைகளைக் கழகத் தோழர்கள் திவீரமாக மேற்கொள்ள வேண்டும் எனவும், மாதாந்திர கலந்துரையாடல் கூட்டம் கட்டாயம் நடத்தப்பட வேண்டும் எனவும், தோழர்களிடையே சந்திப்பு என்பது வழக்கமாக்கபட வேண்டும் எனவும் கழகத் தலைவர் தனது உரையில் குறிப்பிட்டுப் பேசினார்.

இதில் மாவட்ட - பகுதிக் கழக நிர்வாகிகள் மற்றும் கழகச் செயல்வீரர்கள் உள்ளிட்ட 70 க்கும் மேற்பட்டோர் பங்கேற்று தங்களது கருத்துகளைப் பகிர்ந்து கொண்டனர்.

நிறைவாகக் கொளத்தூர் நகரத் தலைவர் ராமமூர்த்தி நன்றி கூற கலந்துரையாடல் கூட்டம் நிறைவு பெற்றது.



**ஈரோடு வடக்கு:** ஈரோடு வடக்கு மாவட்டக் கலந்துரையாடல் கூட்டம் 08.08.2024 அன்று 05.00 மணியளவில் சத்தியமங்கலம் P.V விடுதி கூட்ட அரங்கில் நடைபெற்றது.

ஆலோசனைக் கூட்டத்திற்கு கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமை தாங்கினார்.

இக்கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, பொருளாளர் திருப்பூர் துரைசாமி, தலைமை நிலையச் செயலாளர் தபசிகுமரன், வெளியீட்டுச் செயலாளர் ராம.இளங்கோவன், தலைமைக்குழு உறுப்பினர் பன்னீர்செல்வம், மாவட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள், தமிழ்நாடு அறிவியல் மன்றத் தோழர்கள் திரளாகப் பங்கேற்று கழகத்தின் எதிர்காலச் செயல் திட்டங்கள் குறித்து தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

இதில் கோபியில் கடந்த 20.07.2024 அன்று மறைந்த முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமைச் செயற்குழு உறுப்பினருமான பகுத்தறிவாளர் திரு.வி.பி.சண்முகசுந்தரம் அவர்களுக்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மேலும் பிரபாகரன் - காயத்ரி இணையர்களின் குழந்தைக்குக் கழகத் தலைவர் அமுதன் எனப் பெயர் சூட்டினார்.

பின்னர் கழகத் தோழர் நடராசன் தன் இறப்புக்கு பின் எந்த விதமான சடங்குகளும் தனது உடலுக்கு செய்யக்கூடாது என்று தன் சுய கையொப்பமிட்ட மரணசாசனம் சான்றிதழைக் கழகத் தலைவரிடம் பெற்றுக்கொண்டார்.

ஆலோசனைக் கூட்டத்தில் பேசிய கழகத் தலைவர் கழகத்தின் அடுத்த கட்ட செயல்பாடுகள் பரப்புரை வடிவங்கள், பரப்புரையில் எடுத்துச் செல்ல வேண்டிய செய்திகள் ஆகியவை குறித்து விரிவாகப் பேசினார்.

நிறைவாக மாவட்டத் தலைவராக நாத்திக ஜோதி, மாவட்டச் செயலாளராக செல்வகுமார், மாவட்ட அமைப்பாளராக நிவாஸ், மாவட்ட இளைஞரணித் தலைவராக செல்வன், மாவட்ட இளைஞரணிச் செயலாளராக அறிவுமதி, மாவட்ட பரப்புரைச் செயலாளராக வேணுகோபால் ஆகியோர் நியமிக்கப்பட்டனர்.

கோபி ஒன்றிய அமைப்பாளராக ஜெகநாதன், நம்பியூர் ஒன்றிய அமைப்பாளராக ரமேஷ், சக்தி - சிதம்பரம், பவானி - வினோத், அம்மாபேட்டை - வேல்முருகன், அந்தியூர் - சென்னியப்பன், TN பாளையம் - கருப்பண்ணன், தமிழ்நாடு அறிவியல் மன்ற மாவட்டத் தலைவர் - முத்துச்சாமி, மாவட்டச் செயலாளராக வீரா கார்த்திக், மாவட்ட அமைப்பாளராக சுந்தரம் ஆகியோரும் நியமிக்கப்பட்டனர்.

தமிழ்நாடு மாணவர் கழகத்திற்கு தமிழரசன், வழக்கறிஞர்கள் பிரிவுக்கு ஜெகதீசன், மாவட்ட இணையதளப் பொறுப்பாளராக இராவணன் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

## கலைஞர் நினைவுநாளில் மரியாதை




**சென்னை :** மானமிகு சுயமரியாதைக்காரர் கலைஞரின் ஆறாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு சென்னை மாவட்டக் கழக சார்பில் இராயப்பேட்டை படிப்பகம் முன்பு அமைக்கப்பட்டிருந்த அவரது படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது..

இதில் ஒருங்கிணைந்த சென்னை மாவட்டக் கழகச் செயலாளர் இரா.உமாபதி, தென் சென்னை மாவட்டத் தலைவர் வேழவேந்தன், தென் சென்னை மாவட்ட அமைப்பாளர் எட்வின் பிரபாகரன், வட சென்னை மாவட்ட துணைச் செயலாளர் அ.வ.வேலு உள்ளிட்ட கழகத் தோழர்கள் பங்கேற்றனர்.




**கோவை:** கலைஞரின் ஆறாம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு கோவை மாநகர் மாவட்டக் கழக சார்பில் காந்திபுரம் அண்ணா சிலை முன்பு அமைக்கப்பட்டிருந்த அவரது படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

இதில் மாநகரத் தலைவர் நிர்மல் குமார், மாநகரச் செயலாளர் வெங்கடேசன், பீளமேடு பகுதி அமைப்பாளர் இராஜாமணி, மாதவன், சதீஷ் கல்லூரி மாணவர் ஏற்காடு கோகுல் பங்கேற்றனர்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS Under WPP
Posted : August 16, 2024

owner and publisher by : k. rajendran, from 29, Journalists colony, thiruvalluvar nagar, thiruvanmiyur, chennai - 600 041.
and printed by : S. Theesmas, at lilly soosai offset, new no.8, old No.12/1, mohammed usain lane, royapettah, chennai - 600 014.
editor ; k. rajendran